# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-2 - கெடுமிடர்
## (திருவனந்தபுரத்தைச் சேர்ந்தால் பரமபதத்திற் போலக் கைங்கர்யம் செய்யலாம் என்று பரோபதேசம் செய்தல்)

3678 * கெடும் இடராயவெல்லாம் * கேசவா என்ன * நாளும்
கொடுவினை செய்யும் * கூற்றின் தமர்களும் குறுககில்லார் **
விடமுடை அரவில் பள்ளி * விரும்பினான் சுரும்பலற்றும் *
தடமுடை வயல் * அனந்தபுர நகர் புகுதும் இன்றே 1

3679 இன்று போய்ப் புகுதிராகில் * எழுமையும் ஏதம் சார *
குன்று நேர் மாடமாடே * குருந்து சேர் செருந்தி புன்னை **
மன்றலர் பொழில் * அனந்தபுர நகர் மாயன் நாமம் *
ஒன்றும் ஓராயிரமாம் * உள்ளுவார்க்கு உம்பரூரே 2

3680 ஊரும் புட்கொடியும் அஃதே * உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான் *
சேரும் தண்ணனந்தபுரம் * சிக்கெனப் புகுதிராகில் **
தீரும் நோய் வினைகள் எல்லாம் * திண்ணம் நாம் அறியச் சொன்னோம் *
பேரும் ஓராயிரத்துள் * ஒன்று நீர் பேசுமினே 3

3681 பேசுமின் கூசமின்றிப் * பெரிய நீர் வேலை சூழ்ந்து *
வாசமே கமழும் சோலை * வயலணி அனந்தபுரம் **
நேசம் செய்து உறைகின்றானை * நெறிமையால் மலர்கள் தூவி *
பூசனை செய்கின்றார்கள் * புண்ணியம் செய்தவாறே! 4

3682 புண்ணியம் செய்து * நல்ல புனலொடும் மலர்கள் தூவி *
எண்ணுமின் எந்தை நாமம் * இப்பிறப்பறுக்கும் அப்பால் **
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் * செறிபொழில் அனந்தபுரத்து *
அண்ணலார் கமல பாதம் * அணுகுவார் அமரர் ஆவார் 5

3683 அமரராய்த் திரிகின்றார்கட்கு * ஆதிசேர் அனந்தபுரத்து *
அமரர் கோன் அர்ச்சிக்கின்று * அங்கு அகப்பணி செய்வர் விண்ணோர் **
நமர்களோ! சொல்லக் கேண்மின் * நாமும் போய் நணுக வேண்டும் *
குமரனார் தாதை துன்பம் * துடைத்த கோவிந்தனாரே 6

3684 துடைத்த கோவிந்தனாரே * உலகுயிர் தேவும் மற்றும் *
படைத்த எம் பரம மூர்த்தி * பாம்பணைப் பள்ளி கொண்டான் **
மடைத்தலை வாளை பாயும் * வயலணி அனந்தபுரம் *
கடைத்தலை சீய்க்கப் பெற்றால் * கடுவினை களையலாமே 7

3685 கடுவினை களையலாகும் * காமனைப் பயந்த காளை *
இடவகை கொண்டதென்பர் * எழிலணி அனந்தபுரம் **

படமுடை அரவில் பள்ளி * பயின்றவன் பாதம் காண *
நடமினோ நமர்களுள்ளீர்! * நாம் உமக்கு அறியச் சொன்னோம் 8

3686 நாம் உமக்கு அறியச் சொன்ன * நாள்களும் நணியவான *
சேமம் நன்குடைத்துக் கண்டீர் * செறிபொழில் அனந்தபுரம் **
தூம[1] நல்விரை மலர்கள் * துவளற ஆய்ந்து கொண்டு *
வாமனன் அடிக்கென்றேத்த * மாய்ந்தறும் வினைகள் தாமே 9

3687 மாய்ந்தறும் வினைகள் தாமே * மாதவா! என்ன * நாளும்
ஏய்ந்த பொன்மதிள் * அனந்தபுர நகர் எந்தைக்கென்று **
சாந்தொடு விளக்கம் தூபம் * தாமரை மலர்கள் நல்ல *
ஆய்ந்து கொண்டு ஏத்த வல்லார் * அந்தமில் புகழினாரே 10

3688 * அந்தமில் புகழ் * அனந்தபுர நகர் ஆதி தன்னை *
கொந்தலர் பொழில் * குருகூர் மாறன் சொல் ஆயிரத்துள் **
ஐந்தினோடு ஐந்தும் வல்லார் * அணைவர் போய் அமருலகில் *
பைந்தொடி மடந்தையர் தம் * வேய்மரு தோளிணையே 11

**அடிவரவு:** கெடும் இன்று ஊரும் பேசுமின் புண்ணியம் அமரர் துடைத்த
கடுவினை நாம் மாய்ந்து அந்தமில் வேய்

[1] தூப